வாசகர் கடிதம்

# தாலி பெண்ணுக்கு என்ன?

சாந்தி வவுனியனின் தாலி பெண்ணுக்கு வேலியா?சோலியா?என்றகட்டுரையை ஒரு பேப்பர் (இதழ் 83) வாசித்தேன். மிகவும் உணர்ச்சி வயப்பட்டு எழுதியிருக்கிறா என்பதை மட்டும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

கட்டுரையை முடிக்கும் போது நாடுநாடாக தொலைபேசியில் சபிப்பவர்கள் அனைவருமே சபியுங்கள் எனக்கு எந்தவித கவலையுமில்லை. இனிமேல் என் கண்முன்னால் இப்பிடியொரு சம்பிரதாயம் பின்பற்றப்படுமாயின் தாலி கழற்றிக்க வருவோரின் தாலிகளை நான் அறுத்துத் தருவேன் என்றும் எழுதியிருந்தா

எனக்கு வாசித்தவுடன் முதலில் தோன்றியது ஒரு பெண்ணைப் பற்றி பேப்பரில் எழுதும் சாந்தி இதனால் அந்தப்பெண்ணின் நிம்மதிக்கு எள்ளளவேனும் பாதிப்பு வருமா என்று ஒருகணமேனும் பெண்ணென்ற ரீதியில் தன்னும் சிந்தித்தாவா என்பதும், செத்த வீட்டில் பெண்கள் மிகவும் மனம் பாதிக்கப்பட்ட நிலையில் குழறி குழறி அழுவதை எல்லாம் அவர்களின் ஆழமான மனவிருப்பு என்று எடுத்துக்கொண்டு அவர்கள் கேட்பதை அப்பிடியே கேட்ட பிரகாரம் நிறைவேற்றும் மன எழுச்சி உள்ள சாந்தி சில காலத்திற்கு முன்பு நடந்த எனது உறவினர் ஒருவரின் இறந்த வீட்டுக்கு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசித்து பார்த்தேன்.

அங்கு அப்பெண் ஐயோ என்னை விடுங்கோ.. விடுங்கோ என்று நாலைந்து பேர் இழுத்துப்பிடிக்க அதையும் மீறிக்கொண்டு ஓடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருந்தார். ஐயோ .அவரில்லாமல் ஒரு வாழ்வு எனக்கு வேண்டாம் ..ஐயோ உங்களை கையெடுத்து கும்பிடுகிறன் ..என்னையும் அவரோடு போக விடுங்கோ..போக விடுங்கோ..அவரை பிரிஞ்சு ஒருநாள் கூட நான் இருந்ததில்லை.. ஐயோ? ஐயோ ..எங்களை பிரிஞ்சு போடாதேங்கோ.... என்னை விடு என்று பிடித்தவர்களுக்கு நெஞ்சில் குத்திக் கொண்டிருந்தாள்.

பிணத்தோடு பிணமாக எரிந்து போகத் துடிதுடிக்கும் இப்பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத பெரியவர்களின் அநியாயத்தை சாந்தி தட்டிக்கேட்டு அப்பெண்ணின் விருப்பத்தை முன்னின்று நிறைவேற்றி இருப்பாவா?

பெண்ணுக்காக குரல் கொடுக்கும் பெண்கள் மிகவும் அவதானமாக விடயத்தைக் கையாள வேண்டும். சில நேரம் உணர்ச்சி வயப்பட்டு சமூகப்பிரச்சனைகளை கையாளும் போது அது எதிர்மறைவான விளைவுகளையும் உருவாக்கி சொல்ல விளைந்ததன் பொருளும் பயனும் அற்று விடும்.

மேலும் பெண்களுக்காக குரல் கொடுக்க முனைபவர்கள் கொஞ்சப் பேர். அவர்களும் அதை சரியான முறையில் சொல்லா விட்டால் சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்ற மாதிரி போய் விடும்.

தாலி பெண்ணுக்கு வேலியா? சோலியா? என்று எழுதவிளைந்தால்.. அதை ஒரு சம்பவத்தையோ..ஒரு பெண்ணையோ (அந்தப் பெண்ணுக்கும்... அதே போன்ற நிலையில் உள்ள மற்றப் பெண்களுக்கும் உண்மையில் நல்லது செய்ய நினைத்திருந்தால்) குறிப்பிடாமல் அதாவது திகதி வாரியாக எழுதாமல் அந்த சம்பவத்தின் கருவில் விளைந்த ஒரு ஆழமான, சமூகம் சார்ந்த ஆய்வாக எழுதியிருக்கலாம். உணர்ச்சி பிழம்புக்குள் வாசகர்களைத் தள்ளாது அறிவு சார்ந்து சிந்திக்கத் தூண்டியிருக்கலாம்.

சாந்தியின் கட்டுரையை ஒரு விதவை பெண்ணிடம் வாசித்துக் காட்டினேன். வாசித்ததும் அவ முதலில் சொன்னது கணவன் இறந்த பெண்ணுக்கு இவ எழுதப்போவது தெரியுமா?

அப்படி இல்லாவிட்டால் அவவுக்கு கணவன் இறந்த கவலையையுடன் இப்படி தன் பேர் பத்திரிகையில் அடிபடுவது இன்னும் கவலையாக இருக்கப்போகிறது என்று சொன்னதோடு அது சரி இப்ப அந்த தாலி அவவிடம்தானே இருக்கும் இனி போட விருப்பம் என்றால் போட்டிருக்கிறதுதானே ஒவ்வொரு நாளும் வந்து, இந்த வெளிநாட்டில யாரும் கழட்டு கழட்டு என்றா சொல்லிக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்று அப்பாவித்தனமாக ஒரு கேள்வியையும் கேட்டுவைத்தா?

மேலும் நாங்கள் முந்தி தாலி கட்டினால் ஒருக்காலுமே கழட்டுவதில்லை கழுத்தை விட்டு, இப்ப நீங்கள் கட்டியிருக்கிற காலத்த விட கழற்றி வைத்திருக்கிற காலம் தான் கூட இதுக்கேன் அழுவான்....அதை விட அறுப்பான் ஏன் கட்டுவான் ஏன் என்று தானே இப்ப உங்களில் சிலர் ஒன்றுமில்லாமலே சேர்ந்து வாழுகிறீர்கள் சடங்கும் வேண்டாம் ..சம்பிரதாயமும் வேண்டாம் ..என்று அப்பிடியே இருங்கோவன் தமிழ் பண்பாடு வாழும் என்று பொரிந்து தள்ளினா?

என்னட அவர் செத்தபோது விதவை மாமி ஒருவதான் வந்து என்ட தாலியைக் கழட்டினவ நான் கவலையில குழறி அழுதனான் தான் ஆனால் செத்தாபிறகும் தாலியைப் போட்டிருக்கோணும் என்று அழவில்லை. சரியா என்ன சொல்லி அழதனான் என்று பிறகு ஞாபகம் இல்லை.

ஆனால் அப்பவே எங்கட ஊரில ஒருவ செத்தாபிறகும் கழட்டமாட்டன்? அவர் நினைவாக போட்டிருப்பன் என்று போட்டிருந்தவ.. ஏன் இந்தியாவில் நான் இருந்த போது பாதுகாப்பு என்று ஒட்டுப்பொட்டு நெற்றியில் போட்டிருக்கிற விதவைகளைக் கண்டிருக்கிறேன் என்று சொன்னா.

நான் மொத்தமாக நாலு கணவன் இறந்த செத்த வீடுகளுக்கு போயிருக்கிறேன் ஆனால் சாந்தி எழுதிய அளவிற்கு கோரமாக நடக்காது மிகவும் கண்ணியமாகவே எல்லாச் சம்பிரதாயங்களும் நடந்தேறின. சாந்தி எழுதிய அளவிற்கு அது நடத்திருந்தால் அது கண்டிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வே.

பொட்டு வைத்து, பூ முடித்து, தாலி போட்டு வந்தால் என்ன தேர் திருவிழாவோ? கல்யாணமோ என்று கேட்கிற காலத்தில ஏற்கனவே இல்லாத ஒன்றை பலாத்காரமாக இழக்க வைப்பதுவும் இல்லாமல் இழந்த ஒன்றுக்காக போராடுவதுவும் விந்தை உலகம் இது. என்ன சொல்ல வருகிறார்கள்?

கணவன் இறந்தபின்பும் தாலி, பொட்டு, பூ எல்லாம் போடலாம் என்றா?

அல்லது விருப்பியவர்கள் போடலாம் மற்றவர்கள் விடலாம் என்றா?

அல்லது போடுவதுவும் விடுவதும் அவரவர் விருப்பம் ஆனால் அதை இல்லாமல் செய்யும் நிகழ்வு மரணசடங்கில் வேண்டாம் என்றா?

அல்லது தாலியைக் கட்டி, கணவன் கையால் பொட்டிட்டு கல்யாணம் கட்டுவான் ஏன் பிறகு அதை கழட்டி பொட்டை அழிப்பான் ஏன் எனவே தாலி கட்டும் கல்யாணமும் வேண்டாம். அதை கழட்டும் கருமாதி சடங்கும் வேண்டாம் என்றா?

கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்.

- சுந்தரி.

## ஹா ஹா ஹா ...

தமிழ் வாத்தியாருடைய வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். பாடத்தை முடிப்பதற்கான மணியடித்ததும் அவர் தமது தமிழ்ப் புலமையை இப்படிக் காட்டினார்

‘அடித்தது மணி

முடிந்தது பணி’

அதற்கு மாணவர்கள் தமது புலமையை இப்படிக் காட்டினார்கள்

‘தொலைந்தது சனி’




- Immigration & Nationality
- Conveyancing
  (Both residential and commercial)
- Civil Litigation
- Criminal litigation
- Housing
- Land Lord and Tenants
- Employment Law
- Judicial Review
- Injunction

**Lexis**
Law Solicitors
**Solicitors and commissioners for Oath**

*Friendly Solicitors firm, local to you, delivering your legal matters in a efficient and cost effective means.*

Tel/Fax **020 8543 7745**

52, High street
Collierswood, SW 19 2BY